**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

HMOP No.04/2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 11.09.2025**ம்** நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரகாசம் | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | பாலசுப்ரமணியம் | கிராமம் | : | |
| வயது | : | 42 | மாவட்டம் | : | |

**ம.த.சா:1**

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் மனுதாரர். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். வாக்குமூலத்தில் விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொண்டு மனுப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

1) 10.11.2021ம் தேதியிட்ட திருமணப்பத்திரிக்கை அசல் ம.த.சா.ஆ.1

2) மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.2

3) 01.07.2022ம் தேதியிட்ட திருமண பதிவுச் சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.3 ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை (எதிர் மனுதாரர் தரப்பில்):–**

எனக்கும் எதிர் மனுதாரர் ராஜேஸ்வரிக்கும் 10.11.2021ம் தேதியன்று திருமணம் ஆனது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு ரவி கறிக்கடை, பாசூர் என்ற விலாசத்தில் உள்ள வீட்டில் எதிர் மனுதாரரும், அவரது மகள் இனிகாஸ்ரீயுடன் நான் சந்தோசமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் என் பெற்றோர் மற்றும் என் அண்ணனை மதிக்காமல் இருந்தார் என்றும், வீடு கட்டுவதற்கு பணம் கொடுக்கவில்லை என்றும், எனக்கு உடல்நிலை சரியில்லாதபோது மருத்துவ செலவிற்கு பணம் கொடுக்கவில்லை என்று மனுவிற்காக

## Copy of Deposition

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிர் மனுதாரரும் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக TPN மருத்துவமனை ஈரோட்டிற்கு சிகிச்சைக்காக சென்றோம் என்றால் சரிதான். மேற்படி சிகிச்சைக்கு எதிர் மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்றும், எதிர் மனுதாரர் கருத்தடை செய்து கொண்டார் என்றும் மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. TPN மருத்துவமனையில் எனது மருத்துவ அறிக்கையின் படி எனக்கு உடல்நிலையில் பிரச்சனை என்பதால்தான் எதிர் மனுதாரருடன் நான் குடும்பம் நடத்த முன்வராமல் வீட்டில் இருந்து வெளியேறி விட்டேன் என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள் இருவரும் பேசி தற்போது அவரவரர் பொருட்களை அவரவர் பெற்றுக்கொண்டு பிரிந்து விடுவதாக முடிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். இனி சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால் செலவுத் தொகை இல்லாமல் இந்த மனு அனுமதிக்கப்படுகிறேன் என்று வேண்டுகிறேன்.

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.11 16:40:31 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |

**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

HMOP No. 04/2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 11.09.2025**ம்** நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஸ்வரி | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | சிவானந்தம் | கிராமம் | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

**எ.ம.த.சா:1**

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் எதிர் மனுதாரர். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். வாக்குமூலத்தில் விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொண்டு மனுப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்):–**

எனக்கு ஏற்கனவே பிரபு என்பவருடன் திருமணமாகி சட்டப்படி விவாகரத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு என் முதல் கணவர் மூலம் இனிகாஸ்ரீ என்ற பெண் குழந்தை உள்ளது. நான் மனுதாரருக்கு வீடு கட்டுவதற்கு 6 பவுன் தாலியை மனுதாரர் அடமானம் வைத்ததாக மனுவிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரருக்கு ரூ.10,00,000/– உதவி செய்ததாக மனுவிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ரூ.3,00,000/– கொடுத்தேன். மனுதாரர் கங்கா மருத்துவமனை கோயம்புத்தூரில் சிகிச்சை பெற்று வந்தபோது நான் அவரை சென்று பார்க்கவில்லை என்றாலும், மருத்துவ சிகிச்சைக்கு பண உதவி அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் அவரை பார்த்தேன். எங்கள்

## Copy of Deposition

இருவருக்கும் இடையே தாம்பத்தியம் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் எதிர் உரையில் மனுதாரர் மீது கூறியுள்ள குற்றச்சாட்டு அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சேரவேண்டிய பொருட்களை நான் மனுதாரரிடம் இருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எதிர்வரும் காலத்தில் எந்த ஒரு ஜீவனாம்சமும் மனுதாரரிடம் கோர மாட்டேன் என்றால் சரிதான். மனுதாரர் கோரியபடி தீர்ப்பாவதில் எனக்கு எந்த ஒரு ஆட்சேபணையும் இல்லை.

**மறுவிசாரணை:— இல்லை**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.11 16:40:42 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |